திரு இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்திலே கைத்தறி ஆய்வாளர்கள் சில கூட்டுறவு சங்கங்களுக்கு நூல் கொடுக்கவேண்டுமென்று கூட்டுறவு நூற்பாலைகளுக்கு ஒப்புதல் கொடுத்தாலும், நூல் கொடுக்க மறுக்கிறார்கள். அதே மாதிரி, கோ-ஆப்டெக்சிலும் சில குறிப்பிட்ட சங்கங்களுக்குத்தான் நூல் கொடுக்கிறார்கள். எனவே, அவர்களும் நூல் கொடுக்க மறுக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, திருச்செந்தூர், கன்னியாகுமரி, பேட்டை, திருவில்லிப்புத்தூர் போன்ற இடங்களிலே உள்ள நூற்பாலைகளிலும் நூல் கொடுக்க மறுக்கிறார்கள். ஆதலால் அங்கே நூல் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நூல் கிடைக்க வேண்டுமென்பதற்காக இரண்டு ''யார்ன் டிப்போக்கள்'' திறந்திருக்கிறோம். எனவே, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நேரடியாக நூல் சப்ளை செய்ய வேண்டிய அவசியமில்லை. கைத்தறித் துறை இயக்குநர் அவர்கள் நூலை விலைக்கு வாங்கி, இந்தக் கூட்டுறவு சங்கங்களுக்கு இந்த நூலை விற்பனைக்கு கொடுக்கிறார்கள். ஒரு வேளை இந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நேரடியாக ஆலைக்குச் சென்று, கடனுக்கு நூல் வேண்டுமென்று கேட்டு, மறுக்கப்பட்டிருக்கலாம். எனவே, இந்தச் சங்கங்களுக்குத் தேவையான நூலை, இந்த நூல் விற்பனை நிலையங்களிலே இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் எனது கவன ஈர்ப்புத், தீர்மானம் குறித்து அறிக்கை இங்கே வைத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இங்கே அறிக்கை வைக்கப்படவில்லை. வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப்பற்றி விசாரிக்கிறேன்.

(5) அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1973-74 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும், சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள், பற்றிய மேற்படி குழுவின் ஆறாவது அறிக்கையை அளிக்கிறேன்.